# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## முதலாம் தவணைப் பரீட்சை – 2024

| தரம் - 12(2025) | வணிகக் கல்வி | நேரம்: 3.00 மணித்தியாலம் 10 நிமிடங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

**அறிவுறுத்தல்கள்:**

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01- 15வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

### பகுதி - I

01. பின்வரும் பண்புகளுள் மனித தேவைகளுக்கு மட்டும் பொருந்தக் கூடியது,
(1) வரையறுக்கப்பட்டது, பொதுவானது, வணிகரால் தோற்றுவிக்கக்கூடியது.
(2) வரையறுக்கப்பட்டது, பொதுவானது, சமூக சக்திகளால் மாற்றப்பட முடியாதது.
(3) வணிகரால் தோற்றுவிக்கக் கூடியது, பொதுவானது, பல்வகைப்பட்டது.
(4) தனித்துவமானது, மனதில் தோன்றுவது, வணிகரால் தோற்றுவிக்க முடியாதது
(5) வரையறுக்கப்பட்டது, பல்வகைப்பட்டது, தனித்துவமானது (............)

02. வணிகத்தின் வளர்ச்சிக் கட்டத்துடன் தொடர்புடைய சரியான கூற்றாக அமைவது,
(1) பரிமாற்று சாதனப் பயன்பாடு பண்டமாற்று முறைமையைத் தோற்றுவித்தது.
(2) மிகையான உற்பத்தி காரணமாக தனிநபர் சிறப்புத் தேர்ச்சி ஏற்பட்டது.
(3) பண்டமாற்று முறைமையானது, நேரில் உற்பத்தியைத் தோற்றுவித்தது.
(4) தகவல் யுகம், பௌதீக ரீதியான பணப்பாவனையைத் தோற்றுவித்தது.
(5) கைத்தொழில் புரட்சி இணைய வர்த்தக நடவடிக்கைகளைத் தோற்றுவித்தது. (............)

03. பின்வரும் அட்டவணையானது, வணிக வகைப்படுத்தல்களின் அடிப்படைகளையும், வணிக வகைகளையும் தருகின்றது.

| வகைப்படுத்தலுக்கான அடிப்படைகள் | வணிக வகைகள் |
|---|---|
| 1. தன்மை / உற்பத்தி மட்டங்கள் | A - விவசாயம் / கைத்தொழில்/ சேவைகள் |
| 2. உற்பத்தித்துறை | B - சிறிய / நடுத்தர / பாரிய |
| 3. உடைமை | C - முதனிலை / இரண்டாம் நிலை / மூன்றாம் நிலை |
| 4. நோக்கம் | D - இலாபமீட்டல் / இலாபமீட்டலுக்காக அல்ல |
| 5. அளவு | E - தனியார் / பொது |

வகைப்படுத்தல்களின் அடிப்படைகளுக்கும் வகைகளுக்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.
(1) A, C, E, D, B (2) B, A, E, C, D (3) C, A, E, D, B
(4) A, B, C, D, E (5) C, A, D, E, B (............)



kalvi.lk

04. பின்வரும் அட்டவணையில் வணிக செயன்முறையுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளும் அவற்றுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| வணிகத் தொழிற்பாடுகள் | உதாரணங்கள் |
|---|---|
| 1. நிர்வாகம் | A - விலையினைத் தீர்மானித்தல் |
| 2. செயற்பாடு (உற்பத்தி) | B - தரக்கட்டுப்பாட்டில் ஈடுபடுதல் |
| 3. சந்தைப்படுத்தல் | C - பணியாளர்களின் கோவைகளைத் தயாரித்தல் |
| 4. தகவல் முகாமைத்துவம் | D - ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் |
| 5. நிதி | E - தகவல்களை இற்றைப்படுத்தல் |

வணிகத் தொழிற்பாடுகளின் ஒழுங்கிற்கேற்ப உதாரணங்களின் ஒழுங்கினைச் சரியாகக் கொண்ட விடை

(1) D, B, A, E, C (2) E, C, B, D, A (3) A, B, C, D, E
(4) E, D, C, B, A (5) C, B, A, E, D (...........)

05. வணிகமொன்றில் அக்கறை செலுத்தும் பிரிவினர் அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் சில பின்வருமாறு:

A - வணிகத்தின் விருத்தி தொடர்பில் அறிந்து கொள்ளல்.

B - உயர்ந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்கு

C - முகாமைத் தீர்மானங்களின் வெற்றி தோல்விகளை அறிவதற்கு

D - தொழில் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு

E - தொழிலில் பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு

F - வேலை வாய்ப்புக்களை உயர்த்துவதற்கு

H - உபகாரக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஊழியர் வணிகத்தில் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களை மட்டும் கொண்ட விடைத்தொகுதி,

(1) B, D, E, H (2) A, B, D, E (3) A, D, E, H
(4) B, D, E, F (5) C, D, F, H (...........)

06. பின்வரும் இரண்டு கூற்றுக்களையும் கருத்தில் கொண்டு பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

கூற்று A :- வணிகத்தின் வளர்ச்சியில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய காரணி வாடிக்கையாளரை விட போட்டியாளர் ஆகும்.

கூற்று B :- வணிகத்தின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணிகளில் மிகவும் முக்கியமானது வாடிக்கையாளர் ஆவர்

(1) A மாத்திரம் சரியானதாகும்.
(2) B மாத்திரம் சரியானதாகும்.
(3) A, B ஆகிய இரண்டும் பிழையானதாகும்.
(4) A யும் B யும் சரியானவையாகும். அதேவேளை B இனூடாக A விபரிக்கப்படுகிறது.
(5) A யும் B யும் சரியானதாகும். அதேவேளை B இனூடாக A விபரிக்கப்படவில்லை.

07. A - உரிமையாளர் B - பேட்டியாளர் C - வழங்குனர்
D - நிறுவனக் கட்டமைப்பு E - அரசு F - ஊழியர்

மேற்படி சூழல் காரணிகளுள் அகச்சூழல் காரணிகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதி

(1) A, B, F (2) C, E, F (3) A, D, E
(4) A, D, F (5) D, E, F (...........)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

08. வணிகமொன்றின் அண்மிய சூழலுடன் தொடர்புபடக் கூடிய கூற்றினைத் தெரிவு செய்க.
(1) ஊழியர்களின் அனுபவம் சிறப்பாக இருத்தல்.
(2) புதிய போட்டியாளர் சந்தையினுள் வருதல்.
(3) இயற்கை வளங்கள் அழிவடைதல்.
(4) தளிநபர் பெறுமானங்கள்.
(5) வணிகப்பாதுகாப்பு சட்டங்கள் உருவாக்கப்படல். (...........)

09. பின்வருவனவற்றுள் பொருளாதாரச் சூழல் காரணிகளை உள்ளடக்கிய விடையினைத் தெரிவு செய்க.
(1)பணவீக்கம், விலைமட்டம், நாணய மாற்றுவீதம், சேமிப்பு
(2) சனத்தொகை, பணவீக்கம், வியாபாரக் கூட்டு, முதலீடு
(3) கல்வி மட்டம், புதிய கண்டுபிடிப்பு, கலாசாரம், நம்பிக்கைகள்
(4) நாணய மாற்றுவீதம், காலநிலை, சேமிப்பு, பணவீக்கம்
(5) வேலை வாய்ப்பு, பால்வேறுபாடு, உலகமயமாக்கல், வயது மட்டம் (...........)

10. பின்வரும் அட்டவணையில் வணிகமொன்று தனது சமூகப்பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய பிரதான தரப்பினர்களும் அவர்களுக்கான சமூகப் பொறுப்புக்களும் தரப்பட்டுள்ளன.

| தரப்பினர் | சமூகப்பெறுப்புக்கள் |
|---|---|
| 1. சமூகம் | A - பொருத்தமான வேலைச் சூழலைப் பேணுதல் |
| 2. வாடிக்கையாளர் | B - வேலை வாய்ப்புக்களை வழங்கல். |
| 3. உரிமையாளர் | C - தரமான பொருட்கள் சேவைகளைவழங்கல். |
| 4. ஊழியர் | D - பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொடுத்தல். |

மேலே தரப்பட்டவற்றில் சரியான இணைப்பைக் கொண்ட தொகுதி,
(1) A, B, C, D (2) D, C, B, A (3) A, B, D, C
(4) D, C, A, B (5) B, C, D, A (...........)

11. 'நிறைபேறான தன்மை' என்பது,
(1) சூழல், கலாசார மற்றும் அரசியல் விசைகள் மீதான நீண்ட கால நோக்கு
(2) சூழல், பொருளாதார மற்றும் சமூக விசைகள் மீதான நீண்ட கால நோக்கு
(3) சூழல், பொருளாதார மற்றும் கலாசார விசைகள் மீதான நீண்ட கால நோக்கு
(4) சூழல், பொருளாதார மற்றும் சமூக விசைகள் மீதான குறுங்கால நோக்கு
(5) சூழல், அரசியல் மற்றும் சமூக விசைகள் மீதான குறுங்கால நோக்கு (...........)

12. பொருளாதாரத்தின் உள்நாடு, வெளிநாடு எனும் வகையில் பிரச்சினை ஏதும் ஏற்படாதியிருப்பதற்கு சிறப்பாக தாக்கு பிடிக்கக்கூடிய ஆற்றலைக் குறிப்பது,
(1) பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்
(2) பூரண வேலைவாய்ப்பு மட்டம்.
(3) நியாயமான வருமானப் பரம்பல்.
(4) பொருளாதார நிலைப்புத்தன்மை
(5) மொத்த உள்நாட்டு உற்பத்தி (...........)

13. அரசின் வருமானங்கள் செலவுகள் தொடர்பாக இடம்பெறும் கருமங்களை உள்ளடக்கிய கொள்கை
(1) நாணயக் கொள்கை
(2) சர்வதேச வர்த்தக கொள்கை
(3) இறைக்கொள்கை
(4) கைத்தொழில் கொள்கை
(5) திறந்த பொருளாதாரக் கொள்கை (...........)



kalvi.lk

14. சில்லறைக் கடையொன்றில் பால்மா பைக்கற் ஒன்றினைக் கொள்வனவு செய்த மாலா சுற்றுத்துண்டில் சில தகவல்கள் மாற்றப்பட்டிருப்பதை அவதானித்தார். இங்கு மீறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமையை எடுத்துக்காட்டுவது,
(1) தகவல் பெறும் உரிமை
(2) கவனத்தை ஈர்க்கும் உரிமை
(3) இழப்பீட்டைப் பெறும் உரிமை
(4) தெரிவு செய்யும் உரிமை
(5) ஆரோக்கியமான சூழலில் வாழ்வதற்கான உரிமை (...........)

15. இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காக தொழிற்படும் அரச நிறுவனங்களில் முதன்மையானது
(1) இலங்கைத் தரக்கட்டளைகள் நிறுவகம்
(2) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை.
(3) மத்திய சூழல் அதிகார சபை
(4) மாவட்ட செயலாளர் அலுவலகம்
(5) பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் (...........)

➢ **16 - 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

16. (அ) ............................................... மற்றும் ............................................... சேர்க்கை வணிகம் ஆகும்.

(ஆ) ............................................... மற்றும் ............................................... சேர்க்கை வர்த்தகம் ஆகும்.

17. (அ) வணிகத்திற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் ............................................... மேற்கொள்ளப்படுவது இலத்திரனியல் ............................................... என அழைக்கப்படும்.

(ஆ) மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்கு ............................................... முன் வைக்கப்படும் எந்தவொன்றும் ............................................... என அழைக்கப்படும்.

18. (அ) வணிகமொன்று தன்னுடன் கருமமாற்றுகின்ற சகல தரப்பினர்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய முறையில் ............................................... மற்றும் ............................................... தொடர்பாக விளங்கிச் செயற்படல் வணிக ஒழுக்கம் ஆகும்.

(ஆ) வளப் பாவனையைக் குறைத்து ............................................... வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி மனித நலனை மேம்படுத்துதல் ............................................... என அழைக்கப்படும்.

19. (அ) அகரீதியான விலை நிலைப்புத் தன்மையூடாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ............................................... மட்டத்தை நிலையாகப் பேணுவதுடன் புற ரீதியான விலை நிலைப்புத் தன்மையூடாக ............................................... வீதம் நிலையாகப் வேணப்படுகின்றது.

(ஆ) தரமுகாமைத்துவ முறைக்கான சர்வதேசதர நிறுவகத்தின் சான்று ............................................... ஆகவும், சூழல் முகாமைத்துவ முறைக்கான சர்வதேச தர நிறுவகத்தின் சான்று ............................................... ஆகவும் காணப்படுகின்றது.

20. (அ) முற்பண தனிநபர் வருமானங்கள் மீது விதிக்கப்படும் வருமானவரி (APIT) ............................................... திணைக்களத்தால் அறவிடப்படுவதுடன் இது ............................................... அரசின் கீழ் தொழிற்படுகின்றது.

(ஆ) உற்பத்தி நிறுவனம் ஒன்று உற்பத்தி செயன்முறையில் கலப்படங்களை மேற்கொள்ளக் கூடாது என்பது ............................................... தொடர்பான ஒழுக்க நெறியாக அமைவதுடன் விளம்பரங்களை மேற்கொள்ளும் போது போலியான உத்தரவாதங்களை வழங்கக் கூடாது என்பது ............................................... தொடர்பான ஒழுக்க நெறியாகவும் கருதப்படும்.



kalvi.lk

➢ **21 - 25 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

21. வணிகப் பரம்பலின் பிரதான நான்கு படிமுறைகளையும் தருக.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

(4) ..........................................................................................................................

22. ஊழியர் வணிகமொன்றுக்கு பலமாக அமையக்கூடிய சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

(4) ..........................................................................................................................

23. பின்வரும் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான கழிவுப்பொருள் முகாமைத்துவ எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

| நடவடிக்கைகள் | எண்ணக்கரு |
|---|---|
| 1. பிளாஸ்ரிக் பொதிகளைப் பயன்படுத்தாதிருத்தல். | .......................................................... |
| 2. மீன் பிடித்தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன்வளர்ப்பில் ஈடுபடல். | .......................................................... |
| 3. கால்நடைக் கழிவுகளிலிருந்து உரம் தயாரித்தல். | .......................................................... |
| 4. உணவு பொதியிடலுக்கு சில்வர் பெட்டிகளைப் பயன்படுத்தல். | .......................................................... |

24. இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளக்கூடிய ஏதேனும் இரண்டு மூலதனச் செலவுகளையும், இரண்டு நடைமுறைச் செலவுகளையும் குறிப்பிடுக.

மூலதனச் செலவுகள்

1. ..........................................................................................................................

2. ..........................................................................................................................

நடைமுறைச் செலவுகள்

1. ..........................................................................................................................

2. ..........................................................................................................................

25. இறைக் கொள்கையினதும், நாணயக் கொள்கையினதும் பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக.

1. இறைக் கொள்கை ..........................................................................................

2. நாணயக் கொள்கை ..........................................................................................



kalvi.lk

kalvi.lk

## பகுதி - II

**அறிவுறுத்தல்கள்:**

❖ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - அ

01. கிராமப்புறமொன்றில் உள்ள இரண்டு இளைஞர்களான ரவியும் கரனும் க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்றவர்களாவர். வேலை வாய்ப்பொன்றினை எதிர்பார்த்துள்ள இருவரும் தமது கிராமத்திலிருந்து தொலைவிலுள்ள பாடசாலைக்கு சிறுவர்கள் செல்வதற்கு சிரமப்படுவதை அவதானித்த இருவரும் அதனை தமக்கான ஒரு வணிக சந்தர்ப்பமாகக் கருதி பயன்படுத்தப்பட்ட சிறிய ரக பஸ் ஒன்றினைக் கொள்வனவு செய்து சேவையிலீடுபடுத்தத் தீர்மானித்தனர். கரன் வாகனம் திருத்தும் திறனையும் ரவி வாகனம் செலுத்தும் திறனையும் கொண்டிருந்ததால், வணிகத்தினை இலகுவாக நடாத்த முடிந்தது. பாடசாலைச் சிறுவர்கள் மாத்திரமன்றி ஒருசில அரச உத்தியோகத்தர்களும் அவர்களது சேவையால் பயனடைந்தனர்.

i) மேற்படி வணிகத்தினால் நிறைவு செய்யப்படும் மனித தேவையினையும் விருப்பத்தையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) மேற்படி வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iii) மேற்படி சம்பவத்தினால் குறிப்பிடப்பட்ட அகச்சூழல் காரணி ஒன்றினையும் அண்மிய சூழல்காரணி ஒன்றினையும் தருக. (02 புள்ளிகள்)

iv) ரவியும் காரனும் தங்கள் வணிகத்தின் வெற்றியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தினர் எனக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

v) மேற்படி வணிகம் சூழல் பாதுகாப்பிற்கு எவ்வாறு பங்களிப்பு செய்ய முடியும் எனக் கருதுக. (02 புள்ளிகள்)

(5x2=10 புள்ளிகள்)

02. I) ஆத்மி கூரையோடு உற்பத்தி <u>வணிகம்</u> ஒன்றை நடாத்திச் செல்வதற்குப் பொருத்தமான காணி ஒன்றைக் கொள்வனவு செய்து தனது வணிகத்திற்கு தேவையான <u>களிமண்</u> மற்றும் <u>ஊழியர்களைத்</u> தொழிற்சாலைச் சூழலிலிருந்து பெற்றுக் கொண்டதுடன் நகரத்திலுள்ள கடையொன்றிலிருந்து தேவையான <u>இயந்திர உபகரணங்களையும்</u> கொள்வனவு செய்தாள்.
பந்தியில் கோடிடப்பட்ட பதங்களுக்குரிய உற்பத்திக்காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) மலரவன் மோட்டார் வாகனங்கள் திருத்தும் நிலையமொன்றை (Garage) நடாத்தி வருகின்ற அதேவேளை அவருடைய சகோதரர் ஆடை உற்பத்தி வணிகமொன்றை நடாத்தி வருகின்றார். சகோதரர்கள் இருவரும் வணிக நிறுவனங்களை நடாத்தி வருவதனால் இவ்விரு வணிகங்களுக்கும் பொதுவான ஒழுக்கக் கோவை ஒன்றை, உருவாக்கினால் சிறப்பானதென அவர்கள் கருதுகின்றனர்.

அ. மேலே உள்ள சம்பவக் கற்கையில் இரண்ட வணிகங்களுக்கும் பொதுவான ஒழுக்கக் கோவை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் உமது கருத்தனைத் தருக. (01 புள்ளி)

ஆ. வணிக ஒழுக்கங்களை பின்பற்றுவது எவ்வகையில் மேற்படி வணிகங்களுக்கு முக்கியமானது என்பதற்கான இரண்டு காரணங்களைத் தருக. (01 புள்ளி)

iii) அ. நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்யக்கூடிய முறைகள் இரண்டு குறிப்பிடுக. (01 புள்ளி)

ஆ. பொதுவாக வணிகங்கள் கழிவுகளை முகாமை செய்வதற்கு கடைப்பிடிக்கக் கூடிய வழிமுறைகள் இரண்டு குறிப்பிடுக. (01 புள்ளி)

iv) பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் தலையீடு இல்லாதபோது நுகர்வோர் எதிர்கொள்ளக் கூடிய பாதகமான விளைவுகள் இரண்டினை விபரிக்குக. (02 புள்ளிகள்)

v) வணிகங்கள் சமூகப் பொறுப்பினை நிறைவேற்ற வேண்டிய நான்கு முக்கிய தரப்பினர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

03. i) இறக்குமதி செய்யப்படும் பழ வகைகளுக்கான இறக்குமதி வரியினை அரசாங்கம் அதிகரிக்கத்



kalvi.lk

தீர்மானித்துள்ளதெனக் கருதுக. இதனால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் இரண்டினையும் பிரதிகூலங்கள் இரண்டினையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) அரச வருமானம் குறைவடைந்தமையும் தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமைக்கான ஒரு காரணமாகும். அரசாங்கம் தனது வருமானத்தினை அதிகரிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iii) அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுகளை எதிர்கொள்வதற்கு நுகர்வோர் ஒருவர் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv) வணிக நடவடிக்கைகள் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும் அவற்றினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

v) கழிவுகள் ஏற்படக்கூடிய இரண்டு பிரதான செயற்பாடுகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

## பகுதி - ஆ

04. i) வணிகமொன்றின் 'பலம்' என்பதையும் 'வாய்ப்பு' என்பதையும் வரையறுக்குக. (02 புள்ளிகள்)

ii) அ. நிறுவனக் கலாசாரம் எனப்படுவது யாது? (01 புள்ளி)

ஆ. நிறுவனக் கலாசாரம் வணிகமொன்றுக்கு எவ்வாறு பலமாக அமையும்? (01 புள்ளி)

iii) வேலைச்சூழல் காரணிகள் பேரினச் சூழல் காரணிகள் ஊடாக எவ்வாறு வணிக நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விபரிக்குக. (02 புள்ளிகள்)

iv) பேரினச்சூழல் காரணிகளுக்கிடையில் காணப்படக்கூடிய தொடர்புகளை விளக்குக. (02 புள்ளிகள்)

v) சமூகப் பொறுப்புக்கள் எனப்படுவது யாது? (02 புள்ளிகள்)

05. i) வணிகமொன்று நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் பிரதான நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii) அரசின் பொருளாதார நோக்கங்களில் ஒன்றான பொருளாதார நிலைப்புத்தன்மை / உறுதித்தன்மையின் இரு பிரிவுகளையும் எழுதுக. (02 புள்ளி)

iii) அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்ற வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iv) தற்காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதற்கான நான்கு காரணங்களை விபரிக்குக. (02 புள்ளிகள்)

v) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் நுகர்வோருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கினை எழுதுக. (02 புள்ளிகள்)

06. i) பின்வரும் சந்தர்ப்பங்களின் அடிப்படையில் வணிகங்களில் அரசு செல்வாக்குச் செலுத்தும் வகிபாகங்களைப் பெயரிடுக.

1. தனியார் துறைக்கு சமனானதாக வியாபார நிலையங்களை அமைத்து வாடகைக்கு விடல்
2. மின்சார வசதிகளை வழங்குதல்
3. நெல்களை கொள்வனவு செய்தல்
4. நிதிக்கொள்கை, இறைக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் (02 புள்ளிகள்)

ii) பின்வரும் வணிகங்களை விவசாயத்துறை, கைத்தொழில் துறை, சேவைகள் துறை என வகைப்படுத்துக.

1. ஜீவன் மருந்தகம்
2. அகல்யா கோழிப்பண்ணை
3. சில்வா கட்டட ஒப்பந்தகாரர்
4. வானதி பதிப்பகம்
5. ஜெமினி விருந்தினர் விடுதி
6. பூநகரி கஜூ தோட்டம் (02 புள்ளிகள்)

iii) இலங்கைத் தரக்கட்டளைகள் நிறுவகம் தர நியமங்களை நடைமுறைப்படுத்தும் முறைகள் எவை? (02 புள்ளிகள்)

iv) நுகர்வோர் பொறுப்புக்கள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

v) இலத்திரனியல் வணிகம் விருத்தியடைவதற்கான காரணங்கள் எவை? (02 புள்ளிகள்)



kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page